# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**ஒப்பந்த ஊழியர் ஊதியம் தொடர்பாக PGM(F)உடன் சந்திப்பு**

அன்பார்ந்த தோழர்களே,

தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை என புகார் வந்துள்ளது. குறிப்பாக மல்லி செக்யூரிட்டி சர்விசஸ் நிறுவனம் பல இடங்களில் ஊதியம் வழங்காமலும், சில இடங்களில் குறைவாகவும் வழங்கியுள்ளதாகவும் நமது மாவட்ட செயலாளர்கள் தெரிவித்தனர். அந்த நிறுவனத்திற்கு சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் 2.65 கோடி ரூபாய்களுக்கான பில்கள் தேங்கியிருப்பதாகவும், அங்கிருந்து நிதி வழங்காத காரணத்தால் தன்னால் வழங்க இயலவில்லை என்று தெரிவித்ததாகவும் நமது தோழர்கள் தகவல் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா, மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், மாநில உதவி செயலாளர்கள் தோழர் P.இந்திரா மற்றும் தோழர் C.செல்வின் சத்யராஜ் ஆகியோர் 16.05.2017 அன்று மாநில தலைமை பொது மேலாளர் அலுவலகத்தில் PGM(F) திரு G.ரவி அவர்களை சந்தித்து விவாதித்தனர். தற்போது மல்லி செக்யூரிட்டி சர்விசஸ் உள்ளிட்ட அனைத்து ஒப்பந்த தாரர்களுக்கு 1.53 கோடி ரூபாய்கள் 15.05.2017 அன்று வங்கிக்கு அனுப்பி விட்டதாகவும், UNION வங்கியில் தொழில்நுட்ப பராமரிப்பு செய்து வருவதன் காரணமாக தாமதமாகி உள்ளதாகவும், 17.01.2017 அன்று வங்கியிலிருந்து அந்தந்த ஒப்பந்ததார்களின் கணக்கிற்கு பணம் சென்று விடும் என்று உறுதி அளித்துள்ளனர். ஒரே ஒரு மாவட்டத்திலிருந்து மாநில அலுவலகத்திற்கு காலதாமதமாக வந்துள்ள 23 லட்ச ரூபாய் மட்டுமே மல்லி செக்யூரிட்டி சர்விசஸுக்கு நிலுவையில் உள்ளதாகவும் அதுவும் ஓரிரு தினங்களில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**